# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
## TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL

# அரையாண்டுத் தேர்வு
# 2013 - 2014
# தமிழ்மொழி
## வளர் தமிழ் 7

சுட்டெண்:.......................................................... நேரம்: 150 மணித்துளிகள்

1) **தேர்விடை வினா - சரியான விடைக்குரிய எழுத்தின் கூட்டில் புள்ளடி இடுக.**

1. இசைக் கலை பற்றி மிக நுணுக்கமாகக் கூறும் நூல்

   அ) மணிமேகலை ஆ) வளையாபதி

   இ) குண்டலகேசி ஈ) சிலப்பதிகாரம்

   அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☒

2. கயிலைவன்னியனுக்கு அஞ்சிக் கோட்டைகளைக் கட்டிய ஐரோப்பியர்

   அ) ஆங்கிலேயர் ஆ) போர்த்துக்கேயர்

   இ) ஒல்லாந்தர் ஈ) சிங்களவர்

   அ) ☐ ஆ) ☒ இ) ☐ ஈ) ☐

3. நரம்புக்கருவிகளில் ஒன்று

   அ) வீணை ஆ) புல்லாங்குழல்

   இ) தாளம் ஈ) மேளம்

   அ) ☒ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

4. மதுரை மீனாட்சி அம்மன் கோவிலில் காணப்படும் இசைத் தூண்கள்

   அ) 7 ஆ) 4 இ) 5 ஈ) 6

   அ) ☐ ஆ) ☐ இ) ☒ ஈ) ☐

5. மருதுபாண்டியன் வாழ்ந்த ஊர் தோமையாபுரம். இதில் வந்துள்ள 'வாழ்ந்த' என்ற சொல்

   அ) வினையெச்சம் ஆ) வினைமுற்று

   இ) பெயரெச்சம் ஈ) வினையடி

   அ) ☐ ஆ) ☐ இ) ☒ ஈ) ☐

6. அறிவுக்குப் பகை ________________ என்று சான்றோர் கூறியுள்ளனர்.

   அ) அச்சம் ஆ) சினம் இ) வெள்ளம் ஈ) செல்வம்

   அ) ☐ ஆ) ☒ இ) ☐ ஈ) ☐

7. யாழ்ப்பாண அரசின் தலைநகரமாக அமைந்திருந்த இடம்

அ) பூநகரி ஆ) கந்தரோடை

இ) திருகோணமலை ஈ) முல்லைத்தீவு

அ) ☐ ஆ) ☒ இ) ☐ ஈ) ☐

8. சென்ற இடமெல்லாம் சிறப்புக் குரியவன்

அ) மன்னன் ஆ) கற்றோன்

இ) வீரன் ஈ) செல்வந்தன்

அ) ☐ ஆ) ☒ இ) ☐ ஈ) ☐

9. பாடினான் என்பது

அ) இறந்தகாலம் ஆ) நிகழ்காலம்

இ) எதிர்காலம் ஈ) வருங்காலம்

அ) ☒ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

10. பின்வரும் எழுத்துகளில் இடையின மெய்யெழுத்து

அ) த் ஆ) ங் இ) ய் ஈ) ற்

அ) ☐ ஆ) ☐ இ) ☒ ஈ) ☐

11. கயிலைவன்னியன் ஆட்சிக்காலத்தில் வன்னி ________________ பற்றுகளாய்ப் பிரிக்கப்பட்டிருந்தது.

அ) மூன்று ஆ) பத்து

இ) ஐந்து ஈ) ஏழு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☒

12. பொறாமை உள்ளவனிடம் இது இருக்காது என வள்ளுவர் கூறுகின்றார்.

அ) செல்வம் ஆ) உயர்வு

இ) மகிழ்ச்சி ஈ) நட்பு

அ) ☒ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

13. இலங்கையின் பழங்குடி மக்கள்

அ) இயக்கர், நாகர் ஆ) இயக்கர், பறங்கியர்

இ) நாகர், ஆரியர் ஈ) நாகர், பறங்கியர்

அ) ☒ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

14. அடுக்குத் தொடருக்கு எடுத்துக்காட்டு

அ) விடிய விடிய ஆ) மளமள

இ) கண்ணும் கருத்தும் ஈ) பென்னம் பெரிய

அ) ☒ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

15. வந்து என்பது

அ) பெயரெச்சம் ஆ) எழுவாய்

இ) வினைமுற்று ஈ) வினையெச்சம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☒

16. தமிழ்ப்புலமையால் தலை காக்கப்பட்ட புலவர்

அ) ஔவையார் ஆ) திருவள்ளுவர்

இ) மோசிகீரனார் ஈ) கபிலர்

அ) ☐ ஆ) ☐ இ) ☒ ஈ) ☐

17. கஞ்சமகள் என்பது

அ) தாமரை ஆ) மல்லிகை

இ) அல்லி ஈ) ஆம்பல்

அ) ☒ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

18. **பழமொழி :-** இரக்கப் போனலும் ________________ ப் போ.

அ) சிறக்க ஆ) சிரக்க

இ) சிரிக்க ஈ) சிறுக்க

அ) ☒ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

19. நீ அங்காடிக்குச் செல்! இச் சொல்லியம்

அ) கூற்று ஆ) ஏவல்

இ) வினா ஈ) வியப்பு

அ) ☐ ஆ) ☒ இ) ☐ ஈ) ☐

20. கடப்பாரைக்குப் பிளவுபடாத பாறையைப் பிளக்கக்கூடியது

அ) கோடரி ஆ) மண்வெட்டி

இ) பசுமரத்தின் வேர் ஈ) கத்தி

அ) ☐ ஆ) ☐ இ) ☒ ஈ) ☐

21. யாழ்ப்பாண அரசு வலிமை பெற்றிருந்த காலம்

அ) பன்னிரண்டாம் நூற்றாண்டு ஆ) பதின்மூன்றாம் நூற்றாண்டு

இ) பத்தாம் நூற்றாண்டு ஈ) பதினான்காம் நூற்றாண்டு

அ) ☐ ஆ) ☒ இ) ☐ ஈ) ☐

22. மலையும் மலை சார்ந்த இடமும்

அ) மருதம் ஆ) முல்லை

இ) குறிஞ்சி ஈ) நெய்தல்

அ) ☐ ஆ) ☐ இ) ☒ ஈ) ☐

23. தமிழர் கலைகளை ______________ ஆக வகுத்தனர்.

அ) 24 ஆ) 44 இ) 74 ஈ) 64

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☒

24. வெள்ளத்திற்கு அடங்காச் சினைவாளை பாய்ந்து ஏறியது

அ) தென்னையின் மீது ஆ) பலாவின் மீது

இ) கமுகின் மீது ஈ) இஞ்சியின் மீது

அ) ☐ ஆ) ☐ இ) ☒ ஈ) ☐

25. அடங்காப்பற்று என அழைக்கப்பட்டது

அ) யாழ்ப்பாணம் ஆ) வன்னி

இ) புத்தளம் ஈ) திருகோணமலை

அ) ☐ ஆ) ☒ இ) ☐ ஈ) ☐

26. சினங்காத்தல் பற்றிக் கூறும் திருக்குறளின் அதிகாரம்

அ) வெகுளாமை ஆ) பொய்யாமை

இ) கல்லாமை ஈ) கள்ளாமை

அ) ☒ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

27. தனிச்சொல்லியத்துக்கு எடுத்துக்காட்டு

அ) பள்ளி சென்று விளையாடினேன்.

ஆ) நான் கடலில் நீந்தினேன்.

இ) அம்மா உணவு சமைத்துத் தந்தார்.

ஈ) தம்பி கீழே விழுந்து அழுதான்.

அ) ☐ ஆ) ☒ இ) ☐ ஈ) ☐

28. மாணவி என்பது

அ) ஒன்றன்பால் ஆ) ஆண்பால்

இ) பெண்பால் ஈ) பலர்பால்

அ) ☐ ஆ) ☐ இ) ☒ ஈ) ☐

29. தனித்தனியே பிரித்தால் பொருள் தராதது

அ) அடுக்கிடுக்குத்தொடர் ஆ) அடுக்குத்தொடர்

இ) இரட்டைக்கிளவி ஈ) இணைமொழி

அ) ☐ ஆ) ☐ இ) ☒ ஈ) ☐

30. பொன் + காப்பு என்பதைச் சேர்த்தால்

அ) பொன்காப்பு ஆ) பொற்காப்பு

இ) பொற்க்காப்பு ஈ) பொன்ங்காப்பு

அ) ☐ ஆ) ☒ இ) ☐ ஈ) ☐

புள்ளிகள் 30

2) பாடநூல் வினா - ஏழினுள் ஐந்திற்கு விடை தருக.

1. ‘உலகப் பொதுமறை’ என்று சிறப்பித்துக் கூறப்படும் நூல் எது?

2. மருதுபாண்டியன் விளையாடச் சென்ற இடம் எது?

3. மஞ்சள் குளித்து முகம் மினுக்கி மாயப்பொடி பூசி நிற்பது எது?

4. நுண்கலைகள் என்று அழைக்கப்படுபவை எவை?

5. போர்த்துக்கேயருக்கு அஞ்சாது, திறை செலுத்தாது இறுதிவரை வீரமுடன் ஆட்சி செய்த வன்னி மன்னன் யார்?

6. போர்முரசுக் கட்டிலில் உறங்கிய புலவருக்கு கவரிவீசியவர் யார்?

7. ஏழு இசைகளையும் ஒலிப்பதற்கு நம் முன்னோர்கள் பயன்படுத்திய எழுத்துகள் எவை?

புள்ளிகள் 10

3) பந்தியை வாசித்து; வினாக்களுக்கு முழுவிடை தருக.

இருபதாம் நூற்றாண்டின் விந்தைகளைப் புரிந்து கொண்டிருக்கிறது இன்றைய உலகம். மாந்தரினம் மிகமிக முன்னேறி இருக்கிறது. ஆனால் இந்த வாழ்வை விரும்பாத, இயற்கை வாழ்வை விரும்புகின்ற பழங்குடி மக்கள் இலங்கையில் இன்றும் வாழ்கின்றனர். இவர்களை வேடர் என்று அழைப்பர். இலங்கையில் வில்பத்துக் காடுகளில் சிங்களம் பேசும் வேடர்களும் உன்னிச்சைக் காடுகளில் தமிழ் பேசும் வேடர்களும் வாழ்கின்றனர். சிறுகூலப் பயிர்ச் செய்கை, வேட்டையாடுதல், தேன் எடுத்தல், மந்தை வளர்ப்பு என்பன இப் பழங்குடி மக்களின் தொழில்கள். இயற்கை உணவு, குறைந்தளவு ஆடை, மழை குளிரில் இருந்து தங்களைப் பாதுகாக்க ஒரு சிறு வீடு, நோய்க்கு மூலிகை மருந்துகள் இதுதான் இவர்களது வாழ்க்கை. இவர்கள் பாலையும் தேனையும் அதிகம் விரும்பி உண்பர். இவை சத்துணவாக இருப்பதால் இவர்களது உடலில் சோர்வில்லை. நகர்ப்புற வணிகர்கள் இவர்களிடம் காடுபடு பொருட்களை வாங்குவதற்கு வருவதால், இவர்கள் நகர்ப்புற நாகரிகத்தையும் அறிவர். விண்ணில் பறக்கும் விண்ணுந்துகளைக் காண்பதால் உலக வளர்ச்சியையும் தெரிந்து வைத்திருக்கின்றனர்.

1. இலங்கையில் வாழும் பழங்குடி மக்களை எவ்வாறு அழைப்பர்?

வேடர்

2. தமிழ் பேசும் வேடர்கள் எக்காடுகளில் வாழ்கின்றனர்?

உன்னிச்சைக் காடுகளில்

3. இங்கு கூறப்பட்ட சத்துணவுகள் எவை?

பாலும் தேனும்

பால், தேன்

4. பழங்குடி மக்களின் தொழில்கள் இரண்டினைத் தருக?

திருகை பயிர்ச் செய்கை வேட்டையாடுதல்

தேன் எடுத்தல் மந்தை வளர்ப்பு

5. இப்பழங்குடி மக்கள் உலக வளர்ச்சியினை எவ்வாறு தெரிந்து வைத்திருக்கின்றனர்?

பழக்கிம் விண்மீன்களைக்

காணுதல்

புள்ளிகள் 10

**4) தரப்பட்டுள்ள சொல்லைப் பொருத்தமாக வைத்துக் கவிதையை ஆக்குவோம்.**

## பூக்கள்

| | | | | |
|---|---|---|---|---|
| வண்டுகள் | மலர்கள் | சுற்றிப் | பூத்து | தேனை |

அழகிய வண்ண மலர்கள் மலர்ந்து சிரித்தன

அருகே வண்டுகள் தேனைக் குடிக்கப் பறந்தன

மல்லிகை, றோசாக்கள் மீது வண்டுகள் அமர்ந்தன

மகிழ்வாய் தேனைக் குடித்துச் சுற்றிப் பறந்தன

அங்கு கார்த்திகைப் பூக்களும் அழகாய்ப் பூத்து நின்றன

அவை மாவீரர் பூ என்று வணங்கிச் சென்றன

புள்ளிகள் 10

## 5) இலக்கண / மொழியியல் வினாக்கள் அனைத்திற்கும் விடை தருக.

1. சொற்றொடர்கள் இரண்டு தருக?

_______________________________________________

_______________________________________________

2. பின்வரும் இரட்டைக் கிளவிகளை வைத்துச் சொல்லியங்கள் எழுதுக.

நறநற :- அப்பா சினத்தால் பற்களை
நற நற எனக் கடித்தார்

கிடுகிடு:- நில நடுக்கத்தினால் கட்டடங்கள்
கிடு கிடு என நடுங்கின

3. தனிச்சொல்லியம், தொடர்ச்சொல்லியம் ஒவ்வொன்றுக்கும் எடுத்துக்காட்டுத் தருக.

தனிச்சொல்லியம் :- _______________________________________________

_______________________________________________

தொடர்ச்சொல்லியம் :- _______________________________________________

_______________________________________________

4. பின்வருவனவற்றுக்கு இவ்விரண்டு எடுத்துக் காட்டுகள் தருக.

| இறந்தகாலம் | நிகழ்காலம் | எதிர்காலம் |
| --- | --- | --- |
| ____________ | ____________ | ____________ |
| ____________ | ____________ | ____________ |

5. சொல்லிய உறுப்புகள் அனைத்தும் இடம் பெறுமாறு சொல்லியம் ஒன்று தருக.

தந்தை அழகான ஓவியம் வரைந்தான்

_______________________________________________

புள்ளிகள் 15

6) பந்தியை வாழிடமொழியில் மாற்றி எழுதுக.

ஓர் ஊரில் ஒரு சிறுமி இருந்தாள். அவள் ஒரு நாள் தனது பாட்டியைப் பார்க்க ஊருக்குச் சென்றாள். பாட்டிக்கு நிறைய உணவுப் பொருட்களைக் கொண்டு சென்றாள். இதை நரி ஒன்று கண்டது. அந்த உணவுப் பொருட்களைப் பறித்துத் தின்ன நினைத்தது. அது பாட்டியாக நடிக்கத் திட்டம் போட்டது. பாட்டியின் கட்டிலில் படுத்துக்கொண்டது. சிறுமி அதைக்கண்டு கத்தினாள். அயலவர் வந்து நரியை விரட்டினர்.

There was a little girl in a village. One day she went to visit her grandmother in the village. She took lot of food for her grandmother. A fox saw her carrying food. It decided to snatch away and eat the food. It decided to act like her grandmother. It lay down on grandmother's bed. The little girl saw the fox and screamed. Neighbours came and drove the fox away.

புள்ளிகள் 05

7) **தரப்பட்டுள்ள தலைப்புகளில் ஒன்றைத் தெரிவுசெய்து 125 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

★ கயிலைவன்னியன்

★ மருது பாண்டியன்

★ விளையாட்டுகளும் நாமும், உமக்குப் பிடித்த விளையாட்டு

புள்ளிகள் 20